REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 41 சென்னை: தை 10௳ புதன் (23—1—57) ★ ★ வெளியீடு: தை 11௳ வியாழன் (24—1—57) இதழ் 194

அச்சத்திற்குப் பின்னால் ஆணவம்!

கோவாவிலும் போர்ச்சுகலிலுமாக சிறைவைக்கப்பட்டிருக்கும் எல்லா இந்திய 'சத்தியாக்கிரகி'களும் இன்னும் 5 நாட்களுக்குள் விடுதலை செய்யப்படுவர் என்று கோவா வானொலி தெரிவித்திருக்கிறதாம்.

ஆனால் 'சத்தியாக்கிரகி'கள் விடுதலை செய்யப்படுவதினாலேயே போர்ச்சுகல், கோவாவில் ஒரு அங்குலத்தைக்கூட விட்டுக்கொடுக்கும் என்று எவரும் கருதக்கூடாது எனவும், வீரர்களை விடுதலை செய்யும் செய்தி மேலும் 1,200 போர்ச்சுகல் இராணுவத்தினர் கோவாவிற்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்ற செய்தியுடன் தரப்படுவதையும் நினைவில் கொள்ளவேண்டும் என்றும் வானொலி கூறிற்றும்.

சுமத்ரா விடுதலை எழுச்சி வெற்றி பெறுகிறது!

ஜகார்தா தலைவர்களின் குரல் தணிகிறது

'சுய ஆட்சி வழங்குவோம்' என்கிறார் பிரதமர்

கிளர்ச்சித் தலைவர்களுடன் சமரசம் பேச தூதுக்குழு

ஜகார்தா, ஜன. 21—

தெற்கு, வடக்கு, மத்திய சுமத்ரா மாநிலங்களில் தோன்றிய சுதந்திர எழுச்சி, ஜகார்தா தேசியத் தலைவர்களிடை மனமாற்றத்தைத் தோற்றுவித்திருப்பதுடன், அவர்களது குரலையும் தணித்திருப்பதாகத் தெரியவருகிறது.

'எந்த ஒரு மாகாணமும் கோருமானால், அதற்கு முடிந்தவரை விரிவான சுய ஆட்சி வழங்குவோம்' என்று, இந்தோனேஷியப் பிரதமர் டாக்டர் அலி சஸ்த்ரோமித்ஜோஜோ மக்கள் சபையில் அறிவித்திருப்பதானது, சுமத்ரா எழுச்சி சுதந்திர எழுச்சி என்பதையும், அதனை அடக்க ஜகார்தா தலைவர்களால் முடியவில்லை என்பதையும் தெரிவிக்கின்றது.

தூதுக் குழு

சுமத்ரா எழுச்சிக்குக் காரணமான தலைவர்களைச் சந்திக்கவும், அவர்களது எதிர்காலம் பற்றியும், கோரிக்கைகள் பற்றியும் விவாதிக்கவுமாக மத்திய சர்க்கார் மந்திரி ஒருவர் தலைமையில் தூதுக்குழு சுமத்ரா நோக்கிச் சென்றிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

திட்டங்கள்

சுமத்திராவிற்கான பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை வகுத்து, அவற்றைத் துரிதமாக நிறைவேற்றித் தருவோம் என்றும் பிரதமர் உறுதிமொழி பகன்றாராம்!

'மத்திய சர்க்காருக்கு வரி செலுத்தமாட்டோம்'

தென் சுமத்திரா மாநிலத்தில் மாகாண ஆட்சியிலிருப்போர், 'மத்திய சர்க்காருக்குச் சேரவேண்டிய வரி செலுத்தமாட்டோம்' என்று கூறி, அவற்றைத் தங்கள் கஜானாவிலேயே பாதுகாத்து வருகின்றனர்; அவர்களைச் சமாதானப் படுத்துவதற்காகவும் ஜகார்தா சர்க்கார் முயற்சிக்குமாம்! அதற்காகத்தான், 'உங்கள் திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்றுவோம்,' என்று ஆசை வார்த்தையும் கூறியிருக்கிறார் பிரதமர்!

பலர் கைது

இந்த விபரங்களைப் பிரதமர் மக்கள் சபையில் தந்து கொண்டிருந்தபோதே, ஜகார்தாவிலும் சுமத்திராவிலுமாகப் பல தலைவர்களும் தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர் என்று செய்திகள் தரப்பட்டிருக்கின்றன.

புரட்சிக் கவுன்சில்

தென்சுமத்ரா மாகாணத் தலைவர்கள் பலர் ஒன்றுகூடி 'தனி புரட்சிக் கவுன்சில்' ஒன்றை நிறுவியிருப்பதாகவும், மாகாணத்தில் உள்ள இராணுவத் தலைமைக்கும், மாகாண ஆட்சிக்கும் யோசனை கூறவும் ஒரு கவுன்சிலாக அது இருக்கும் என்று தெரியவருகிறது.

கவர்னருக்குக் கல்தா

ஜாவாவைச் சேர்ந்த (மத்திய ஆட்சிப் பகுதி) ஒருவர் சுமத்திராவில் கவர்னராயிருக்கக் கூடாது என்றும், எனவே, அவருக்குக் 'கல்தா' கொடுத்துவிட்டு, அவரது இடத்தில் சுமத்திராவைச் சேர்ந்த பேராசிரியர் ஹஜாரியன் என்பவரை கவர்னராக நியமிப்பது என்றும் இந்தப் 'புரட்சிக் கவுன்சில்' முடிவு செய்திருக்கிறது.

5,000 அகதிகள்!

கவர்னர் மாளிகைமுன் ஆர்ப்பாட்டம்

கல்கத்தா, சன. 21—

வரப்போகும் பொதுத் தேர்தலுக்குமுன், தங்களுக்குப் புது வாழ்வு அளிக்கவேண்டும் என்று கோரி, கல்கத்தாவிலும் அதன் சுற்றுப்புறத்திலுமாகத் தங்கியுள்ள அகதிகள், இன்று 'இராசபவன்'த்தின் முன்கூடி ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள்.

சுமார் 5 000 அகதிகள் அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு முதலமைச்சர் டாக்டர் பி. சி. ராய் அவர்களைச் சந்திக்க ஊர்வலமாகப் புறப்பட்டபோது போலீசார் அவர்களைத் தடுத்து நிறுத்தியிருக்கின்றனர்.

உடனே அகதிகள், தெருக்களில் கூடி கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

முதன் மந்திரி, தங்களது பிரதிநிதிகளில் நால்வரைச் சந்திப்பதாக எழுதது மூலம் உறுதிமொழி தரவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரியிருக்கின்றனர்.

தமிழ் நாடு காங்கிரசில் அதிகரித்துவரும் பிளவு

மேலிடம் தலையிடாதெனத் தகவல்

புதுடில்லி, சன. 21—

தமிழ் நாடு காங்கிரசில் பெரும் பிளவு தோன்றியிருப்பது மேலிடத்தவருக்குப் பெரும் கவலையைத் தருகிறது என்றாலும், அவர்கள், இந்தத் தகராறில் தலையிடப்போவதில்லையாம்!

இங்குள்ள சம்பந்தமுள்ள வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தந்திருக்கின்றன.

ஏற்பட்டுள்ள பிளவினைச் சரிக்கட்டிக்கொள்ள ஸ்தலமட்டத்திலேயே முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இந்த நேரத்தில், தகராறு குறித்து மேலிடம் விசாரிக்கக் கிளம்பாது என்றும் கூறப்படுகிறது.

'வெளியேறியுள்ள காங்கிரசார் அமைத்துள்ள சீர்திருத்தக் கமிட்டி தேர்தலில் ஈடுபடுவதைப் பற்றி நாங்கள் ஒன்றும் தடுப்பதற்கில்லை,' என்றும் மேலிடம் கூறிவிட்டதாம்!

'இந்தக் கமிட்டியும் தேர்தலில் நின்றாலும்கூட, ஓரிரு இடங்களில் வேண்டுமானால் காங்கிரஸ் ஓட்டுகள் பிளவு படலாமே தவிர, காங்கிரசுக்கு 'மெஜாரிட்டி', பலம் சுலபமாகக் கிடைத்துவிடும் என்றே மேலிடத்திற்குத் தமிழ் நாட்டிலிருந்து தகவல் கிடைத்திருப்பதாகவும், எனவே 'பொறுத்திருந்து பார்ப்போம்,' என்ற போக்கையே மேலிடம் மேற்கொண்டிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★

25—1—57-ல்!

★

தி. மு. கழக அபேட்சகர்கள் 2-ம் பட்டியல்

★

சென்னை 25—1—57 (வெளியீடு 26—1—57) 'நம் நாடு' இதழில், ஏற்கனவே வெளியிட்ட பட்டியலில் இரண்டொரு மாற்றங்களும், அடுத்த பட்டியலும் வெளிவருகிறது.

—தலைமைக் கழகம் (தி. மு. க

★★★★★★★★★★★★★★★★

காங்கிரஸ் டிக்கட் தரப்படாத மந்திரி

இராமநாதபுரம் ராஜா தேர்தலில் போட்டியிடுவார்

சென்னை, சன. 25

தனக்குக் காங்கிரஸ் டிக்கேட் தரப்படாவிட்டாலும், தான் இராமநாதபுரம் தொகுதியிலிருந்து போட்டியிடப் போவதாக மந்திரி இராமநாதபுரம் இராஜா பத்திரிகையாளரிடம் அறிவித்திருக்கிறார்.

தனது இந்த முடிவை அவர், பண்டித நேருவுக்கும் தேபருக்கும் தந்தி மூலம் தெரிவித்துள்ளாராம்.

வரும் 25-ந் தேதியன்று அவர், தனது அபேட்சா பத்திரத்தைத் தாக்கல் செய்வாராம்.

தனது தொகுதியிலிருந்து வேறெந்தக் காங்கிரசாருடைய பெயரும் சிபாரிசு செய்யப்படாமலிருக்கும்போது, தனக்குக் கட்சி டிக்கெட் கிடைக்காமற்போனது ஏன் என்று தனக்குத் தெரியவில்லை என்றும், தான் கட்சி டிக்கெட் கிடைக்காதபோதும் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'பல்கலைக் கழகப் பட்டப் படிப்பிற்கு ஆங்கில அறிவு கட்டாயமாக வேண்டும்'

பரோடா பல்கலைக் கழகத் துணைவேந்தர் கருத்து

கல்கத்தா, சன. 22—

பல்கலைக் கழகப் பட்டப் படிப்புக்கு வரும் மாணவர்கள், போதுமான ஆங்கில அறிவு பெற்றிருத்தல் அவசியம் என நிபந்தனை இருத்தல் வேண்டும். அப்போதுதான் அவர்கள், வகுப்பறையில் நடைபெறும் பாடங்களைப் புரிந்து கொள்ளவும், தேவைப்படும் குறிப்புப் புத்தகங்களைப் படித்தறியவும் முடியும்,"

என்று, பரோடா பல்கலைக் கழகத் துணைவேந்தர் திருமதி ஹன்சா மேதா என்பார் கூறியிருக்கிறார்.

தகுதியற்றவர்கள்

பல்கலைக் கழகப் படிப்புக்குத் தகுதியற்ற மாணவர்கள் வேறு, தொழில் நுட்ப, வர்த்தகக் கல்வி பெறுமாறு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மேட்டூரில் அலுமினிய தொழிற்சாலையாம்!

புதுடில்லி, ஜன. 23—

ஆண்டுதோறும் 10 ஆயிரம் டன் உற்பத்தி சக்தி கொண்ட அலுமினியம் தொழிற்சாலை ஒன்றினை மேட்டூரில் நிறுவுவது என்று தேசியத் தொழில் வளர்ச்சி கார்ப்பரேஷன் முடிவு செய்திருப்பதாக மத்திய கனரகத் தொழில் மந்திரி மனுபாய் ஷா கூறியிருக்கிறாராம்.

தென்னிந்தியாவில் கச்சா பிலிம் தொழிற்சாலை

உதகையில் ஏற்படும் என்கிறார் டாக்டர் ஏ. இராமசாமி

"சினிமாத் தொழிலுக்குப் பயன்படும் கச்சா பிலிம்களையும், புகைப்படச் சாதனங்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று உதகமண்டலத்தில் நிறுவப்படும்" என்று, டாக்டர் ஏ. இராமசாமி அவர்கள், ஏழாவது புகைப்படக் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறியுள்ளார்.

காலங்கடந்தபின் இந்த நடவடிக்கையா?

மத்திய சர்க்கார் அமைச்சர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பொருளாதார ஆலோசகரை நியமிக்கும் திட்டமொன்றை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறதாம்.

அமைச்சர்கள் இலாகாக்கள் ஒவ்வொன்றும் எவ்வளவு செலவு செய்வது—எப்படிச் செய்வது என்று இந்தப் பொருளாதார ஆலோசகர்கள் அமைச்சர்களுக்கு ஆலோசனை கூறுவார்களாம்!

நிசாம் கோரிக்கை நிராகரிப்பு!

செகந்தராபாத், சன. 22—

நிசாம் அரண்மனையில் உள்ள மருத்துவமனைக்காக மூன்று மாதங்களுக்கு ஒருமுறை 70 தோலா கஞ்சா வாங்கிக்கொள்வதற்கு 'பெர்மிட்' தரப்பட்டிருந்தது.

ஆந்திரப் பிரதேச சர்க்கார், இனி 24 தோலா மட்டுமே வாங்கிக்கொள்ளலாம் என்று அளவைக் குறைத்திருக்கின்றனர்.

இந்தக் குறைப்புக்கு எதிராக நிசாம், சர்க்காரிடம் முறையிட்டும் பயனில்லாது போய்விட்டது.

சர்க்கார், 1959-ம் ஆண்டுக்குள் பூரண மதுவிலக்குக் கொண்டுவர இருப்பதால், கஞ்சா விநியோகத்தைப் படிப்படியாக ஒழித்துவருகின்றனர்.

50 கோடி பவுன் நஷ்டம்?

கெய்ரோ, சன. 23—

பிரெஞ்சு - பிரிட்டிஷ் தாக்குதலின் காரணமாக எகிப்துக்கு சுமார் 50 கோடி பவுன் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்றும், இந்த நஷ்டம் முழுவதையும் எகிப்து கோருமென்றும் செய்திகள் மூலம் தெரியவருகிறது.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்.

சென்னை 23—1—'57 புதன்

இழிவு துடைக்க!

'இந்தியர்' என்ற கட்டாயப் புனைபெயர் சூட்டப்பட்ட சுமார் எட்டு இலட்சம் திராவிடர்கள்-தமிழர்கள் 2,34,000 மனுக்கள் மூலம் இலங்கைக் குடியுரிமை கோரினர்—இலங்கையின் 1948-ம் ஆண்டு இந்திய—பாகிஸ்தானி குடியுரிமைச் சட்டத்தின்கீழ். ஆனால் அந்தச் சட்டம் அமுலான 1949-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் ஐந்தாம் நாளிலிருந்து 1956-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் வரை சுமார் 50 ஆயிரம் பேர்களுக்கு மட்டுமே குடியுரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

குடியுரிமை கோருவோர் தொகையோ எட்டு இலட்சம்; ஆனால் குடியுரிமை தரப்பட்டோர், அரை இலட்சம் பேர் மட்டும்தான் — அதுவும், ஏழாண்டுக் காலத்தில்! இந்த விவரங்கள் இலங்கை வாழ் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை விளக்குவனவாகும்.

பண்டாரநாயகா பதவிக்கு வந்ததும், இந்தக் குடியுரிமை கோரும் இலங்கை 'இந்தியர்' பிரச்சினைக்குச் சுமூகமான பரிகாரம் தேடுவார் என்று, இந்த நாட்டில் உள்ள சகல தேசிய ஏடுகளும் தெரிவித்திருந்த நம்பிக்கையையும் போட்டிருந்த கணக்கையும் பொய்யாக்கியிருக்கின்றன, அவரது நடவடிக்கைகள்! கொத்தலாவலை ஆட்சியாவது, தமிழர்களைச் சிறுகச் சிறுக நாடற்றவர்களாக்கி வந்தது; ஆனால் பண்டாவின் ஆட்சியோ பதவிக்கு வந்த குறுகிய காலத்திற்குள் சுமார் 50,000 மனுக்களை ஒட்டுமொத்தமாக நிராகரித்திருப்பதின் மூலம், தமிழர்களைக் கூட்டம் கூட்டமாக 'நாடற்றவர்'களாக்கி வருகிறது.

பண்டித நேருவின் நண்பரான பண்டாவின் வெற்றிக்குக் கொட்டு முழக்கோடு பூரண கும்ப மரியாதை செய்த தமிழ்நாட்டுத் தேசிய ஏடுகள், ஒரு கணமேனும் தாங்கள் செய்த பிழைக்காக—கணித்த தப்புக் கணக்கிற்காகத் தலையைத் தாழ்த்திக் கொள்ளட்டும்!

நன்றி கெட்ட நிலையில் தமிழர்களைப் பகைத்துக்கொண்டு வரும் சிங்கள வெறியர்களின் —தமிழர் ஒழிப்புக் கூட்டத்தின் தலைவர்தான் பண்டா! அதனால்தான் அவர், 'மிதவாதியான' கொத்தலாவலையை அவ்வளவு எளிதில் தோற்கடிக்க முடிந்தது என்பதை இனியாவது, தமிழ்நாட்டுத் 'தேசியக் குரல்'கள் உணர்வது நல்லது.

பண்டாவின் போக்கு தமிழர்களுக்கு நீதி வழங்கக்கூடியதாயில்லை. அவரை ஆட்கொண்டுவிட்ட தீவிரமான சிங்கள இன, மொழி வெறி, நீதியையும் நேர்மையையும் பார்க்க முடியாமல் அவரது கண்களுக்குத் திரையிட்டுவிட்டது. தனிச் சிங்கள மசோதா சட்டமான பிறகும் அவர், தமிழர்களைச் சகோதர இன மக்களாகக் கருதுகிறார் என்று சொல்வது பேதமையாகும். ஏற்கனவே குடி உரிமை பெற்று இலங்கையின் நிரந்தரக் குடிமக்களான தமிழர்களுக்கு இயற்கையாகக் கிடைக்க வேண்டிய உரிமையை இல்லை என மறுத்துவிட்ட அநியாயக்காரரான பண்டாவின் சிங்கள இன வெறி நிரம்பி வழியும் உள்ளம் மேலும் சில இலட்சம் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்கச் சம்மதிக்கும் என்று எதிர்பார்ப்பதும் பேதமையாகத்தான் இருக்க முடியும்.

கொத்தலாவலை, பண்டாரநாயகா போன்றவர்கள், தமிழர்களை நாடற்றவர்களாக்கும் கொடுமையில் போட்டி போட்டுக்கொண்டு தீவிரம் காட்டுவதற்கு, இந்தியப் பேரரசின் கையாலாகாத்தனமும், தமிழர்களை—திராவிடர்களை அன்னியர்கள் என்று கருதும் வடநாட்டு வெறியும் துணை நிற்கின்றன என்றால் அது மிகையாகாது. தங்களது 'அரவணைப்பிற்கு' உட்பட்ட தமிழ் நாட்டவர் மீதே வஞ்சம் தீர்க்கும் போக்கில் நடந்துகொள்ளும் டில்லிப் பெரியவர்கள், இலங்கை போன்றதொரு அன்னிய நாட்டு இன வெறியர்களிடத்தில் சிக்கித் தவிக்கும் தமிழர்களைப்பற்றி என்தான் கவலைப் படப்போகிறார்கள்?

'பண்டா எங்கள் பண்டிதரின் நண்பர்; பஞ்சசீலப் பிதாவான பண்டிதரின் வெளிநாட்டுக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருப்பவர் — ஆதரிப்பவர்; நேருவின் உலகப்புகழ் பண்டா அறிந்ததுவே! கொத்தலாவலைபோன்று குதர்க்க புத்தி படைத்தவர் அல்ல பண்டா; நேருவைப் புகழ்ந்து பேசியிருக்கிறார்; நேருவுக்குப் பண்டாவிடத்தில் நிரம்பச் செல்வாக்கு உண்டு' என்று, இழவு விழுந்த வீட்டில் கல்யாணப் பேச்சுப்பேசின, இந்நாட்டுத் தேசியக்குரல்கள்! அது உண்மையானால்—பண்டிதருக்குப் பண்டாவிடத்தில் செல்வாக்கு இருப்பது உண்மையானால், தமிழர்கள் நாடற்றவர்களாக்கப்படுவதைத் தடுக்க அந்தச் செல்வாக்கினைப் பண்டிதர் உபயோகிக்காததற்கு திராவிடர்களை அவர் அன்னியர் என்று கருதுவதுதான் காரணமாயிருக்க வேண்டும்.

'இல்லை, இல்லை; எங்கள் பண்டிதர் எல்லோரையும் இந்தியராகவே மதிப்பவர்; வஞ்சக நெஞ்சமுடையவர் அல்லர்' என்று 'தேசீயங்'கள் கூறுமானால், 'பண்டிதருக்கு இருப்பதாகச் சொல்லப்படும் செல்வாக்கு வெறும் போலியானதுதானா?' என்றுதான் மக்கள் கேட்பர்.

செல்வாக்கு இருக்கிறதோ இல்லையோ, டில்லிப் பெரியவர்கள், தமிழர்கள் நாடற்றவர்களாக்கப்படும் கொடுமையை ஒரு கடுமையான பிரச்சினையாகக் கருதி, இருதய சுத்தியோடு பரிகாரம் தேட முயற்சித்திருக்கிறார்களா என்றால், இல்லை. ஒப்புக்கு மஞ்சள் குளித்திருக்கிறார்கள்; அவ்வளவுதான்!

அவர்களாவது வடநாட்டவர்கள்; தமிழர்களைப் பற்றிக் கவலைப்பட நியாயம் இல்லை. இந்த மாநிலத்திலிருந்து வந்திருக்கும் காமராசர் ஆட்சி என்ன செய்தது? தன் வடநாட்டு எசமானர்களுக்கு இந்தப் பிரச்சினை குறித்து, கேவலம், ஒரு விண்ணப்பம் கூடப்போட்டதில்லையே! 'தான் ஆடாவிடினும் தன் சதை ஆடும்' என்பார்கள்; ஆனால் காமராசர்களின் உணர்ச்சி மரத்துப்போன உடல்கள், இலங்கைத் தமிழர் அவதி கண்டு ஆடவில்லை!

இவர்கள்தான் மக்களை மறந்தவர்கள் — மதியாதவர்கள்— பிற்போக்குவாதிகள்! ஆனால், எதிர்க்கட்சிகளாயிருந்த அதிதீவிர முற்போக்குவாதிகள் அப்படி ஒரு பிரச்சினையிருப்பதாகவே காட்டிக் கொண்டதில்லை; பிற்போக்குவாதிகளான காங்கிரசாருடன் கைகோர்த்துக் கொண்டு, 'ஏக இந்திய நடனம்' ஆடிக்கொண்டிருக்கிறார்கள்; தமிழர்களை அவமதித்து, அவர்களது நலன்களைத் துச்சமென மதித்து, துரோகமிழைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

எதிர்கால வரலாறு, இவர்களது 'ஏக இந்திய' வேடத்தில் பொதிந்து கிடக்கும் கபடங்களை அம்பலப்படுத்தத் தவறாது! பாரெல்லாம் புகழப்படுபவரான பண்டிதரின் பளபளப்பான முகத்தில், எதிர்காலம், சில கரும்புள்ளி செம்புள்ளிகளைக் குத்திக் களங்கப்படுத்தும் என்பதிலும் சந்தேகமில்லை.

பண்டிதர் உள்ளிட்ட 'ஏக இந்தியா'க்களின் தீஞ்சுவைச் சொற்களால், டில்லி, தமிழருக்கு இழைத்துவரும் நஞ்சனைய வஞ்சகங்களை மூடி மறைத்துவிட முடியாது.

இந்தக் கபடவேடதாரிகளுக்கு—தமிழர்களை மறந்தவர்களுக்கு—தமிழர்களை நாடற்றவர் என்ற இழிநிலைக்குத் தள்ளுவோருக்குத் துணை புரிந்தவர்களுக்கு — அவர்களோடு ஐக்கியமாகிவிட்ட அதிதீவிர முற்போக்குவாதி'களுக்கு, தமிழ் மக்கள் வரப்போகும் தேர்தலில் பாடம் கற்பிக்கத் தவறக்கூடாது!

இவர்களுக்கு ஓட்டளித்து, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதுடன், தங்களுக்கு அபகீர்த்தியும் தேடிக்கொள்ளக் கூடாது, தமிழ் மக்கள்!

தமிழருக்கு ஏற்பட்டுள்ள இழிவினைத் துடைக்க, தி. மு. கழக அபேட்சகர்களை வெற்றி பெறச் செய்யத் தயங்கக் கூடாது!

நெய்யைப் பரிசோதிக்க
• கோவையில் நிலையமாம்!

நெய்யைப் பரிசோதனை செய்து தரத்தை நிர்ணயிப்பதற்கு கோவையில் பரிசோதனை நிலையமொன்றை சென்னை சர்க்காரே ஏற்படுத்துவதற்கு யோசனை செய்யப்பட்டு வருகிறதாம்.

கோபாலனுக்கு உள்ள மலையாள உணர்ச்சி! காமராசருக்கு தமிழுணர்வைத் தந்திருக்க வேண்டாமா?

தேவிகுளம் — பீர்மேடு தமிழ்ப் பகுதிகளைப் பறிகொடுத்தவர்களைத் தட்டிக் கேட்க வேண்டாமா?

திருவொற்றியூரில் பொதுச்செயலாளர் முழக்கம்

“காமராசர்கள் ஆற்றலும் அறிவும் படைத்த ஆட்சியாளர்களாயிருந்திருந்தால், தேவிகுளம்—பீர்மேடு முதலிய தமிழ் வட்டங்கள் தமிழகத்திற்குக் கிடைத்திருக்குமே! செங்கோட்டையில் பாதிபறிபோகாமல் இருந்திருக்குமே!

“தேவிகுளம்—பீர்மேடு வட்டங்களைப் பெற்றுத் திரும்புவோம் என்று கூறிவிட்டு டெல்லி சென்ற காமராசர் குழாம், அவற்றைப் பெறாதது மட்டுமல்ல — செங்கோட்டையிலும் பாதியைக் கோட்டைவிட்டுவிட்டு வந்தார்கள்.

“இங்கே வந்து, 'குளமாவது —மேடாவது! அவை எங்கிருந்தால் என்ன? தமிழ்நாட்டிலிருந்தால் என்ன—கேரளத்தில் இருந்தால் என்ன?'— என்று பேசினார்கள்; இது நியாயமா?

“ஒரு வீட்டுக்காரன் என்னும்போது எல்லோரும் ஒன்றுகின்றனர்; ஒரு தெருக்காரன் என்னும்போது எல்லோரும் ஒன்று கூடித் தங்கள் குரலை எழுப்புகின்றனர். ஒரு ஊர்க்காரன் என்னும்போதும் அப்படியே! இப்படித்தான், பிரச்சினைகளின் எல்லைகளைப் பொறுத்து உரிமைக் கோரிக்கைகள் எழுகின்றன.

“அதன்படி, தமிழர்கள் என்னும்போது அவர்கள் அனைவரும் தங்களுக்குரிய நிலப்பரப்பைக் கோருகின்றனர். இதைக் கூட உணராதவர்கள், 'எது போனாலும் கவலை இல்லை' என்றுகருதுகிறவர்களாக காமராசர்கள் இருக்கிறார்களே! போய்விட்டப் பகுதிகள், பொன்கொழிக்கும் மலைப்பிரதேசங்களாகும்; அங்கிருந்து ஆண்டுதோறும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மிளகின் அளவு மட்டும் ரூ. 21 கோடி மதிப்புடையதாகும். இதுமட்டுமல்ல; இந்தியாவிலேயே அதிகமான காப்பியும் சிறந்த தேயிலையும் அங்கு விளைகின்றன. இத்தகு பிரதேசங்களைத்தான் கோட்டைவிட்டுவிட்டு, தங்கள் பதவிகளை மட்டும் பிரதானமாகக் கருதிய தமிழ் நாட்டின் அவமானச் சின்னங்களாக விளங்குகின்றனர் காமராசர் ஆட்சியினர்!

“தமிழகத்திற்கு, கேரளத்திற்குச் சொந்தமான ஆறு யானைகள் கொண்டு செல்லப்பட்டுவிட்டன என்று கோபித்துக் கொண்டார், தோழர் ஏ. கே. கோபாலன்; விசாரித்த போது, அந்த யானைகள் தமிழகத்திற்கு வரவே இல்லை. இப்படி வராத ஆறு யானைகளுக்காகக் கூக்குரல் எழுப்பினார் கோபாலன்; அவர் ஒன்றும் தேசிய கோபாலன் கூட அல்ல — 'உலகமே ஒன்று' என்று கருதும் 'பரந்த கண்ணோட்டம்' படைத்த கம்யூனிஸ்டு கோபாலன்! அவருக்கு, வராத ஆறு யானைகள் பற்றிக் கூச்சலிடும் அளவுக்கு மலையாள உணர்வு இருக்கிறது. இங்கோ காமராசருக்கு 'தேவிகுளம் — பீர்மேடு முதலிய தமிழ்ப் பகுதிகளைப் பறிகொடுக்கிறோமே' என்றுகூட எண்ணத்தோன்றவில்லை; கேலி பேசும் அளவுக்குத் தமிழ் உணர்வு அற்றவராகக் காணப்படுகிறார்; இவர்தான் பச்சைத் தமிழர்!

“இவர்களைத் தட்டிக்கேட்க ஆள் வேண்டாமா? இவர்களது தான்தோன்றிப் போக்கிற்கு முடிவு கட்ட வேண்டாமா? இவர்களைநெறிப்படுத்த வேண்டாமா? அதற்குத்தான் தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுகிறது.

“தி. மு. கழகத்தை ஒரு கட்சியாக அங்கீகரித்துத் தனியாகச் சின்னம் ஒதுக்கித் தரமாட்டார்களாம், ஆட்சியாளர்கள்! நாம் விரும்பும் 'உதய சூரியன்' சின்னத்தை நாமே முயற்சி செய்து பெற்றுக்கொள்ள வேண்டுமாம்! அப்படிக் கூறியிருக்கிறார்கள். இந்தத் தேர்தல் முடிந்த பிறகு நாம், பதிவாகிற மொத்த வாக்குகளில் 3 சத விகித வாக்குகளைப் பெற்றால் தனிச் சின்னம் ஒதுக்கித் தருவதைப் பற்றி யோசிப்பார்களாம்! எனவே நாம், இது போன்ற இடையூறுகளுக்கிடையேயும், தேர்தலில் ஈடுபடுகிறோம் — ஜனநாயகக் கடமை காரணமாக!

“தோழர்கள் பொறுப்புணர்ந்து, விரைந்து செயல்பட வேண்டுகிறேன். நமது அபேட்சகர்களுக்கு வெற்றி தேடித் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்”

—என்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 19—1—57ல், சென்னை - திருவொற்றியூரில் நடைபெற்ற தி. மு. க. நிதியளிப்புக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

'ரேடியோ ஐசோடோப்'

மருத்துவத்திற்கும் தொழில்களுக்கும் பயன்படக்கூடிய ரேடியோ ஐசோடோப்புகளை (அணுக்கதிரியக்கப் பொருள்களை) ஏற்றுமதி செய்வதில் பிரிட்டன் தான் முன்னணியில் நிற்கிறதாம்!

சென்ற செப்டம்பருடன் முடிந்த ஓராண்டில் 8617 ரேடியோ ஐசோடோப் சிப்பங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதென்றும், அவற்றின் மதிப்பு 1 இலட்சம் பவுன்கள் என்றும், இந்தியா உள்பட 47 நாடுகளுக்கு இவைகள் அனுப்பப்பட்டனவென்றும் கூறப்பட்டிருக்கிறது.

ரேடியோ ஐசோடோப்புகளில் பல ரகமுண்டாம்; வலிமை, ஆயுள் நிலை முதலியவற்றிலும் வித்தியாசமுண்டாம்!

ரூ. 9-இலட்சம் செலவில் மாணவிகளுக்கு விடுதி

சென்னை, சன 21—

சென்னை மவுண்ட்ரோடு அரசாங்க மாளிகைப் பகுதியில் ஒரு பெண்கள் விடுதியைக் கட்டுவது சம்பந்தமான பரிசீலனைகள் முடிந்துவிட்டதென்றும், கட்டிட வேலைகள் விரைவில் துவக்கப்படலாமென்றும் தெரியவருகிறது.

இந்தக் கட்டிடம் முக்கோண வடிவிலும், இரண்டு மாடிகள் 70 அறைகள் கொண்டதாகவும், 200 பெண் மாணவிகள் தங்குவதற்கு வசதியுள்ளதாகவும் இருக்குமாம்.

இதற்கு ரூ. 9 இலட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நாடெங்கிலும் பொங்கல் நாள் விழா

நிகழ்ச்சிகள் பலவற்றுடன் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது

இவ்வாண்டுப் பொங்கல் விழாவினையொட்டி நாடெங்குமுள்ள தி. மு. கழகக் கிளைகள், சார்பு மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவை சார்பில் விழாப் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், இசை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்று மிகச் சிறப்பான முறையில் விழாக் கொண்டாடப்பட்டது. அந் நிகழ்ச்சிகளையெல்லாம், சுருக்கிக் கீழே தந்துள்ளோம் :—

சேலூர் (வ. ஆ.)

14—1—57 காலை 9 மணிக்கு சேலூர் தி மு க மன்றத்தில் தோழர் வி து செயராமன் கழகக் கொடி ஏற்றுவித்தார்.

கொடைக்கானல்

14—1—57-ல் நகர் முழுவதும் விழாவையொட்டி, கழகச் சார்பில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. காலை 10 மணிக்கு குதிரை, கார்கள் ஆகியவைகளுடனும், அண்ணா, பொதுச்செயலாளர் ஆகியோர் உருவப் படங்கள் அலங்கரிக்கப்பட்டு, காரில் வைத்து சிறப்பான ஊர்வலம் சிலம்ப விளையாட்டுக்களுடனும் மேளவாத்தியங்களுடனும் நடைபெற்றது. ஊர்வலம் சே சி. எஸ். மைதானத்தை அடைந்ததும் இசைவிருந்து நடைபெற்றது. பின்னர் சுமார் 800 ஏழைகளுக்கு உணவும் வழங்கப்பட்டது. மாலை, போட்டிப் பந்தயங்களும் நாடகமும் நடைபெற்றன. போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன. தோழர் சே. எம். எம் மேத்தா எம் ஸி., சொற்பொழிவாற்றினர்.

மேலப்பாளையம் (நெல்லை மாவட்டம்)

14—1—57 மாலை 5 மணிக்கு. தோழர் வி. இ. என். மீரான் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ச வீரபாகு, மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர். அனைவருக்கும் பொங்கலும் தேநீர் விருந்தும் வழங்கப் பெற்றது.

கோவிலடி

14—1—57 மாலை 4 மணிக்கு தி. மு. கழகம், திருவள்ளுவர் கழகச் சார்பில் ஊர்வலம், சிலம்ப விளையாட்டுக்களுடன் நடைபெற்ற ஊர்வல இறுதியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. மாலை 6 மணியளவில் கோவிலடி தி மு கழக 3-வது ஆண்டு விழா, பொங்கல் விழாக் கூட்டம் தோழர் சு. தி வயலரசு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

விளாப்பாக்கம்

14—1—57-ல், கிளைக் கழகப் பணிமனை அலங்கரிக்கப்பட்டது. மாலை 4 மணிக்கு. தோழர் ரெ. பெ. சின்னப்பா தலைமையில் மேளவாத்தியங்களுடன் ஊர்வலமும் நடைபெற்று, ஊர்வலம் முடிவில், கழகப் பணிமனை முன் சிறுருக்கு இனிப்புகளும் வழங்கப்பட்டன.

முருகூர் :

16—1—57 மாலை 6½ மணிக்கு கட்டபொம்மன் தெருவில் தோழர் அ கலியபெருமாள் தலைமையில் விழாப்பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் தி. இராமசாமி இரா. இளமுருகு, மருதமுத்து, ஆதிமூலம், மீ சு. இளமுருகு பொற்செல்வி ஆகியோர் பேசினர் உண்டியல்மூலம் வசூலான ரூ. 5-ம் தேர்தல நிதிக்கு அனுப்பப்பட்டது.

அருப்புக்கோட்டை

14—1—57ல் அருப்புக்கோட்டை பெரியகடை வீதியில் தி மு க. உட்கிளை திறப்பு விழாவும் பொங்கல் விழாவும் தோழர் சிவ. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர் டபிள்யூ டி. துரைசாமி உட்கிளையை திறந்துவைத்துப் பேசினர்.

பெங்களூர்— இலட்சுமிநாராயணபுரம்

14—1—57 காலை 11 மணிக்கு. கிளைக் கழகப் பணிமனையில் தோழர் ஏ. அழகிரிசாமி தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர் மு. தணிகாசலம் கழகக் கொடியேற்றினர். தோழர்கள் ப. நாராயணன், எல். வீரன், ஆர். நாகன், வளர்மதி, சம்பந்தி, ஆர். என். இராமன், எம் ஜி வேந்தன், மு. தணிகாசலம், ஆர். சிரங்கன், ஜி திருநாவுக்கரசு ஆகியோர் பேசினர். சிறுருக்குப் பொங்கல் வழங்கப்பட்டது.

இலங்கை

13—1—57 மாலை 3 மணிக்கு. இலங்கை — புதக்கோட்டை, கிராண்ட்பாஸ், சேதுவத்தை கிளைக் கழகங்கள் சார்பில், நாராயண குரு மண்டபத்தில் தோழர் பி எம். ஜலால் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது தோழர் க மு த. கலைதாசன் வரவேற்புரை நிகழ்த்தினர். தோழர்கள் இளவழகன், ஈழவாணன், ஆர். ஆர். கே. டேலர், மு. வே பெ. சாமி, டி. எம். பீர்முகமது. சதிரேசன், ஆறுமுகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கொச்சிக்கடை (இலங்கை)

6—1—57-ல், கொச்சிக்கடை இ. தி. மு. கழகப் பணிமனையில், தோழர் கு. கு மாணிக்கம் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் என். டி. பாண்டியன், மறுமலர்ச்சிப்பித்தன், எஸ் முத்து, க. மனோகரன் பேசினர். பின், தமிழகம் திரும்பும் எல் ஆர். சேகர் அவர்களுக்கு வழி அனுப்புப் பாராட்டுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. தோழர் க மனோகரன் பாராட்டுரை வழங்கினர். தோழர் சேகர், பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

வடக்கன்குளம் (நெல்லை மாவட்டம்)

14—1—57 காலை 9 மணிக்கு, கிளைக் கழகச் சார்பில் சிறப்பான முறையில் விழா கொண்டாடப்பட்டது. விழாவையொட்டி, தோழர் இரத்தினசாமி அவர்களால், கடைத்தெருவில் கிளைக் கழகம் திறந்துவைக்கப்பட்டது. மாலை 6 மணிக்கு தோழர் கு.சி. இராயன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் வடமலைவாணன், தி சி செல்லையா, இ இரத்தினசாமி ஆகியோர் பேசினர்.

கள்ளிவேலிப்பட்டி

14—1—57ல், கிளைக் கழகச் சார்பில் சிறப்பான முறையில் விழா கொண்டாடப்பட்டது. தோழர் க. துரைசாமி கழகக் கொடியேற்றினர். சிறுருக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

வேலூர்—சேலம்

14—1—57 அன்று நகரெங்கும் கழகக் கொடிகளாலும் தோரணங்களாலும் அழகுற அலங்கரிக்கப்பட்டன. மாலை 6 மணிக்கு, இராசன் சோடா கடையில் தோழர் புரி அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர் ஒய் ஏ. இராமநாதன் சிறிதுநேரம் பேசினர் இரவு 7-மணிக்கு, வாணவேடிக்கை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அம்மையநாயக்கனூர்

15—1—57ல், கிளைக் கழகப் பணிமனையில் கொடியேற்றப்பட்டது. மாலையில் கழகப் பணிமனை முன், பொதுமக்களுக்குப் பொங்கல் வழங்கப்பட்டது. மாலை 7 மணிக்கு தோழர் தங்கப்பாண்டியன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் இரா. அ. பரமசிவம், சோமண்ணா ஆகியோர் பேசினர்.

அரசு நிலையம்

15—1—57 மாலை 5 மணிக்கு கிளைக் கழகச் சார்பில், வ. உ. சி திடலில் போட்டிப் பந்தயங்கள் நடத்தி வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் தரப்பட்டன. பொதுமக்கள் அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது. தோழர்கள் முத்து-மாணிக்கம் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

கோவை—செல்வபுரம்

14—1—57 காலை 10 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் கட்டுரைப் போட்டியும், மாலை 3 மணிக்குப் பேச்சுப் போட்டியும் நடைபெற்றன. 15-1-57 இரவு 8 மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில், தோழர் ஆதிசிவம் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வணங்காமுடி, ப கு திருமூர்த்தி, இரா. சுந்தரம் ஆகியோர் பேசினர். இரவு 9 மணிக்கு, அதே மேடையில் பாட்டு, நடிப்பு, மாறுவேடப் போட்டிகள் நடைபெற்றன. பின்னர் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குத் தோழர் தருமலிங்கம் பரிசு வழங்கினர்.

பெங்களூர்-இலக்குமணபுரி

14—1—57 அன்று கிளைக் கழகச் சார்பில் பந்தய விளையாட்டுகள் நடைபெற்றன மாலை 5 மணிக்கு, தோழர் ஆர் முனுசாமி தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் வி. அண்ணாமலை, சி கண்ணன் ஜி. எஸ் அண்ணியப்பன்செ. வெங்கடசாமி ஆகியோர் பேசினர் போட்டியில் கலந்துகொண்டோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன அன்று காலை 9 மணிக்கு, தோழர் வி. சீனிவாசன் அவர்களால் கழக இல்லத்தில் கொடியேற்றி வைக்கப்பட்டது.

நிலக்கோட்டை

15—1—57 மாலை, சந்தை மைதானத்தில் நகரக் கழகச் சார்பில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. தோழர் சண்முகம் குழுவினரின் இசை விருந்தும் நடைபெற்றது. தோழர் இ காத்தான் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர் வே. செயராமன் சொற்பொழிவாற்றினர். போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குத் தோழர் மு. கருணாகரன் பரிசுகள் வழங்கினர். முடிவில் சிறுருக்கு இனிப்புகள் வழங்கப்பெற்றன.

கிழப்பாவூர் :

14—1—57 காலை 9 மணிக்கு கிளைக் கழகச் சார்பில் ஊர்வலமும், நகரின் பல பகுதிகளில் தோழர் எஸ். இலக்குமணன் அவர்களால் கொடியேற்றல் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. 10-மணிக்கு தோழர் செ. காயாம்பூச்சாமி தலைமையில் தோழர் பி. எம். சந்தானமுத்து கே. வி கே. சாமி நினைவுப் படிப்பகத்தையும், தோழர் வி. மா. முத்தரசு, கே வி. கே சாமி உருவப் படத்தையும் திறந்து வைத்தனர். தோழர் ஏ. இராமநாதன் உரையாற்றினர்.

கரிகிரி (வ. ஆ.)

14—1—57-ல், வ. ஆ மாவட்டம் காட்டுப்பாடியை அடுத்த கரிகிரியில் சிறப்பான முறையில் கிளைக் கழகச் சார்பில் விழா கொண்டாடப்பட்டது. வேலூர், காட்டுப்பாடி கழகத் தோழர்கள் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பிரான்மலை :

15—1—57 காலை 10 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு, புதுப்பட்டி. பாப்பாபட்டி, கீழத்தெரு, தண்ணீர்ப்பந்தல், ஆகியவை வழியாக காந்தி சதுக்கம் வந்தடைந்தது அங்காங்கே தோழர்கள் சே. சி. சாமி, சின்னக்கண்ணன், வீரவீரர், முத்துக்குமார், மாரிமுத்து ஆகியோர் கழகக் கொடிகளை யேற்றுவித்தனர். காந்தி சதுக்கத்தில் தோழர் ஞா. தியாக அரசு தலைமையில் விழாக்கூட்டம் நடைபெற்றது.

மேலூர் (செங்கற்பட்டு மாவட்டம்)

15—1—57 காலை 10 மணிக்கு கிளைக் கழக இல்லத்தில் தோழர் சி. ஏழுமலை தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. வாணவேடிக்கைகள் நடைபெற்றன கழக இல்லத்தில் கொடியேற்றுவிக்கப்பட்டு, அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. தோழர்கள் பலர் பேசினர்.

கோவை :

14—1—57 காலை 10 மணியளவில் கோவை நகர் 13-வது வட்டக் கிளை துவக்க விழா, பொங்கல் விழாக்கூட்டம் தோழர் இரா நடராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் வி எஸ் தனுஷ்கோடி அனைவரையும் வரவேற்றார் தோழர் செ. அ. இராசமாணிக்கம் கழகக் கொடியேற்றி வைத்துப் பேசினர். தோழர் முகவை-ஆர் எஸ். பாண்டியன் கழகத்தைத் திறந்துவைத்து போட்டிகளில் வெற்றிபெற்ற சிறுருக்குப் பரிசுகள் வழங்கினர்: தோழர் கா. வெற்றிவேந்தன் சிறிது நேரம் பேசினர்.

அகரம் :

15—1—57 மாலை 4½ மணிக்கு சிலம்ப விளையாட்டுகளுடன் ஊர்வலமும், இரவு 8 மணிக்கு இரா. பால்பாண்டியன் தலைமையில் விழாக் கூட்டமும் நடைபெற்றது தோழர் மு மா. மணி சொற்பொழிவாற்றினர். இரவு 10-மணிக்குக் கேளிக்கை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

முத்தியம்பாளையம்

14—1—57ல், கிளைக் கழகத்திலிருந்து தோழர் கே பி. பெரியசாமி தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு, கே வி. கே. சாமி திடலை அடைந்ததும் தோழர் வி. கே. சின்னசாமி கழகக் கொடியை ஏற்றிவைத்தும் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர். இறுதியில் சிறுருக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

தாலிகட்டிப்பாளையம் (கோவை மாவட்டம்)

14—1—57 காலை 10 மணிக்கு கிளைக் கழகச் சார்பில் தோழர் பரமசிவம் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர் பக்கிரிசாமி கழகக் கொடியையேற்றிவைத்தும், தோழர் க. அன்பரசு பொங்கல் விழா பற்றியும் பேசினர். அனைவருக்கும் பொங்கலும் தின்பண்டங்களும் வழங்கப் பெற்றன.

கரூர்

14—1—57 மாலை 6 மணிக்கு. தோழர் ஆர். பி. காதன் சைக்கிள் கடையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர் வி. கே பிச்சை சொற்பொழிவாற்றினர்.

வத்தலக்குண்டு :

15—1—57 மாலை 7 மணிக்கு தோழர் ஏ. சின்னக்காளை தலைமையில் கிளைக் கழகச் சார்பில் நடைபெற்ற விழாக்கூட்டத்தில் தோழர் முகதா சொற்பொழிவாற்றினர். இரவு 8 மணிக்கு தேனி தோழியர் இருவரின் கழக விளையாட்டுடன் சிறப்பான முறையில் ஊர்வலம் நடைபெற்றது.

ஆவல்சூரன்பட்டி

14—1—57ல், கிளைக் கழகச் சார்பில் தோழர் பா. வெங்கிடப்பன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர் கே. எஸ் சந்தானம் சொற்பொழிவாற்றினர்.

சாலையூர்

16—1—57 மாலை 7 மணிக்கு புதலையையடுத்த சாலையூர் கிளைக் கழகச் சார்பில் தோழர் பெ. பெனூர் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் ச. சிவப்பிரகாசம், சு. பெருமாள், என் எஸ். இளங்கோ, இரெ. இளம்வழுதி ஆகியோர் பேசினர். (அன்று புதலை ஒதியஞ்சாலைத் திடலில் கழகச் சார்பில் நடைபெற இருந்த விழாக் கூட்டம், அரசியலாரின் தடையுத்தரவால் நிறுத்தப்பட்டது).

கொட்டக்குடி

14—1—57 காலை 9 மணிக்கு, கிளைக் கழக அருகில், தோழர் கே. பி. பாண்டியன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர் க இரங்கன் அவர்கள் கழகக் கொடியேற்றினர். தோழர் ஏ வேலுச்சாமி சொற்பொழிவாற்றினர்.

தளவாய்புரம்

14—1—57 காலை 6 மணிக்கு, கழக இல்லத்தில் இசை விருந்துடன் விழா ஆரம்பமாயிற்று. 8 மணிக்கு, அனைவருக்கும் பொங்கலும் கரும்பும் வழங்கப்பட்டன. 10 மணிக்கு, 'உதயசூரியன்' நாடகம் ஒலிபரப்பப்பட்டது. மாலை, அண்ணா அவர்கள் 'தேர்தலில் நாம்' என்ற தலைப்பில் நிகழ்த்திய சொற்பொழிவு ஒலிபரப்பப்பட்டது.

வடகோவை

15—1—57 மாலை, கிளைக் கழக இல்லத்தில் தோழர் எம். கனகரத்தினம் தலைமையில் விழாக் கொண்டாடப்பட்டது. 'பொங்கல்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசினர். இறுதியாகத் தோழர் தமிழ்க்காவலன் அவர்களால் அனைவருக்கும் கற்கண்டு வழங்கப்பட்டது.

வெள்ளரிப்பட்டி

14—1—57-ல், கிளைக் கழகத் தவரால், ஊர் முழுமையிலும் கழகக் கொடி, தோரணங்களாலும் 'உதயசூரியன்' சின்னங்களாலும் அலங்கரிக்கப்பட்டன. கிளைக் கழக இல்லத்தில் கொடியேற்றுவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம்

15—1—57 அன்று இலங்கை யாழ்ப்பாணம் கிளைக் கழக இல்லத்தில் தோழர் டி. கே. சீனிவாசன் தலைமையில் சிறப்புற விழா கூட்டம் நடைபெற்றது. விழாவில் தோழர் இராசதுரை எம்.பி., மற்றும் தமிழரசுக் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி பிரமுகர்களும் கலந்து கொண்டனர். தோழர்கள் டி. கே. சீனிவாசன், செ. இராசதுரை எம் பி. ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இலுப்பக்குடி

16—1—57 காலை 11 மணிக்கு, கிளைக் கழகச் சார்பில் விழா சிறப்பாக நடைபெற்றது. பெருமாள் கோயில் முன்னிலையில் தோழர் நாராயணசாமி அவர்களால் கொடியேற்றப்பட்டது. விழாக் கூட்டத்தில் தோழர்கள் பச்சமுத்து, கலியபெருமாள், ஆறுமுகம் மற்றும் பலர் பேசினர். பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

ராப்ராய் :

15—1—57 அன்று, பொங்கல் விழாவினையொட்டி, தோழர் புரட்சி மணி அவர்களால், கிளைக் கழகத்திற்குக் கைத்தறித் துண்டு ஒன்றும், நீளமான பெஞ்சு ஒன்றும் அன்பளிப்புத் தரப்பட்டது.

அணுசக்தியால் இயங்கும்

எண்ணெய் கப்பல்கள்

பிரிட்டனிலும் கட்டப்படும்

கேப் முனையைச் சுற்றி வேகமாகச் செல்லக்கூடிய பெரிய எண்ணெய்க் கப்பல்களை இயக்கக்கூடிய அணு உலைகளை நிர்மாணிக்கும் ஆராய்ச்சியில் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனராம்.

இத்தகைய எண்ணெய்க் கப்பல்கள் மணிக்கு 25 மைல் முதல் 80 மைல் வேகத்தில் செல்லக்கூடுமாம்.

தற்போது அமெரிக்கா, பிரயாணிகளையும், சரக்குகளையும் ஏற்றிச்செல்லக்கூடிய அணுசக்தியால் இயங்கும் கப்பல் ஒன்றை 420 இலட்சம் டாலர் செலவில் கட்டி வருகிறதாம்.

'நாட்டிலஸ்' எனும் அமெரிக்க நீர்மூழ்கி, அணுசக்தியால் இயங்கி, ஏற்கனவே 5000 மைல் பிரயாணம் செய்திருக்கிறது.

பிரிட்டனிலும் அணுசக்தியால் இயங்கும் வாத்தகக் கப்பல்களைக் கட்டுவது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இந்தியாவின் அணு உலை இயங்குகிறது

உலக நாடுகளுக்கு நேரு தரும் வாக்குறுதி

பம்பாய், சன 20—

"என்ன நடந்தாலும் சரி; எந்தச் சந்தர்ப்பத்திலும் அணுசக்தியைத் தீய காரியங்களுக்கு இந்தியா ஒருபோதும் உபயோகிக்காது" என்று பண்டித நேரு வாக்குறுதியளித்துள்ளார்.

பம்பாயிலிருந்து 16 மைல் தூரத்தில் உள்ள டிராம்பேயில் அணு உலையை இயக்கவைத்துப் பண்டித நேரு பேசுகையில், 'இந்த அணுசக்தி நிலையம் இந்திய மக்களுக்கு உதவிபுரியக் கூடியதோடு, விஞ்ஞான அறிவையும் அனுபவத்தையும் பரிமாறிக்கொள்ளவும் உதவிபுரியும்" என்றார்.

அணுசக்தி மூலம் மின்சார உற்பத்தி

இந்திய அணுசக்தி இலாகா பரிசீலனை செய்கிறதாம்

பெங்களூர், சன. 22—

அணுசக்தி மூலம் மின்சார உற்பத்தி நிலையம் நிறுவுவது பற்றி இந்திய அணுசக்தி இலாகா மும்முரமாக ஆராய்ந்துவருகிறதாம்.

இந்த நிலையத்தை எங்கு அமைப்பது என்பது பற்றி யோசிக்கப்பட்டு வருகிறதாம். இதன் மூலம் 1,40,000 கிலோவாட் மின்சாரம் தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

அணுசக்தி கழிவுப் பொருள்

புற்றுநோயைத் தீர்க்கும் என விஞ்ஞானிகள் முடிவு?

அணுசக்தி உற்பத்தியில் கழிவுப் பொருளாகக் கிடைக்கும் 'கோபால்ட் 60' புற்றுநோயைத் தீர்க்கும் சக்தியுடையது என்பது, விஞ்ஞானிகளுடைய முடிவாகக்கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

அணுசக்தி சிகிச்சையின் பலாபலன்களைப் பற்றி இப்போது எதும் கூறமுடியாதென்றும், அதனுடைய பின் விளைவுகளைக் கணிக்க பல ஆண்டுகளாகக் கூடுமென்றும், என்றாலும் கேன்சர் நோயால் புற்றுநோயைத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை உறுதியாகிவிட்டதென்றும் விஞ்ஞானிகள் கூறியிருக்கிறார்.

'போர் நிறுத்தக் கோட்டிலிருந்து இஸ்ரேல் துருப்புகள் வெளியேறிவிட்டால், சூயஸ் கால்வாய் மராமத்து வேலை நடைபெறும்' என்று ஒரு பிரபல எகிப்திய ஏடு எழுதியிருக்கிறதாம்.

அங்கேரியில் அடக்குமுறை

ஏழு எழுத்தாளர்கள் கைது

புடாபெஸ்ட், சன. 21—

காதர் அரசாங்கம் அங்கேரியில் உள்ள ஏழு தலைசிறந்த எழுத்தாளர்களையும், சிருபர்களையும் கைது செய்திருக்கிறதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

அகதிகள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு உதவி புரிந்தனர் என்ற காரணம் காட்டி மூன்று இரயில்வே சிப்பந்திகளைக் கைது செய்தனராம்!

கைது செய்யப்பட்டுள்ள எழுத்தாளர்களில் இருவர் அங்கேரியின் உயர்தரப் பரிசு பெற்ற எழுத்தாளர்களாம்.

இந்த எழுத்தாளர்கள் அங்கேரி மக்கள் எழுச்சிக்குப் பெரிதும் காரணமாக இருந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

இந்திய நிருபருக்கு அங்கேரியிலிருந்து கல்தா?

லண்டன், சன 21—

சர்வதேச செய்தி நிறுவனத்தின் நிருபரும், இந்தியப் பத்திரிகையாளருமான எம். என். ரே கடந்த சனிக்கிழமையன்று புடாபெஸ்டிலிருந்து வெளியேறினர். திடீரென்று அவர் வெளியேறியதற்குத் தக்க காரணம் தெரியவில்லை. தற்போது அவர் பெர்லினில் உள்ளார்.

மின்சாரம் தயாரிக்க நெய்வேலியில் நிலையம்

மத்திய அமைச்சர் தகவல்

பெங்களூர், சன. 22—

"நீராவி மூலம் மின்விசை உற்பத்தி செய்யும் திட்டமொன்று நெய்வேலியில் மேற்கொள்ளப்படும்; அங்கு கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி 2 இலட்சம் கிலோவாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய நிலையமொன்று ஏற்படுத்தப்படும்" என்று இந்தியப் பேரரசின் திட்ட அமைச்சர் நந்தா கூறியுள்ளார்.

ரூ.427 கோடி செலவில்

மின்விசை உற்பத்தித் திட்டம்

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சார உற்பத்திக்காக ரூ 427 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையில் 44 திட்டங்கள் மேற்கொள்ளப்படும்; இத்திட்டங்கள் மூலம் 50 இலட்சம் கிலோவாட் மின்சாரம் தயாரிக்கப்படும்," என்று, மத்தியத் திட்ட அமைச்சர் குல்சாரிலால் நந்தா கூறியுள்ளார்.

ரூ. 75 கோடி செலவில், மேற்கொண்டும் 10,000 கிராமங்கள் சிறு நகரங்களுக்கு மின்சாரம் விநியோகிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மார்ஷல் ஜுகாவ் சென்னை வருகை

சென்னை, சன 22—

ரஷ்யத் தற்காப்பு அமைச்சர் மார்ஷல் ஜுகாவ் பிப். 5-ந் தேதி ரங்கூனிலிருந்து உதகையிலிருந்து சென்னை வந்து சேருவாராம்.

1 மணி நேர அடையாள வேலைநிறுத்த ஒத்திவைப்பு

சென்னை, சன 23—

ஒரு மணி நேரம் அடையாள வேலை நிறுத்தம் செய்வதென்ற முடிவை, சென்னை என் ஜி ஓ-க்களின் சங்கம் 30—4—57-ந் தேதி வரையில் ஒத்திவைப்பதென முடிவு செய்திருக்கிறது.

மதுரையில் என்.ஜி.ஓ.க்கள் மாநில மாநாடு

மதுரை ஜன 22—

ஜன 26, 27-ந் தேதிகளில், கெசட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்களின் மாநாடு, மதுரையில் நடைபெறுமெனத் தெரிகிறது.

தேவபாண்டலத்திற்கு மு. கருணாநிதி வருகை

★

தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம்

24—1—57 மாலை 5-மணியளவில், தேவபாண்டலம் தி. மு. கழகக் கிளைச் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் கே. வி. கே. சாமி அரங்கில் தோழர் சி. நடராசன் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் மு. கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. சொற்பொழிவாற்றுவர்.

அன்று பிற்பகல் 2½ மணிக்கு குதிரைகள், காளைகள் அணிவகுப்புடனும் சிலம்பு விளையாட்டுக்களுடனும் ஊர்வலமும், பொதுக்கூட்டத் திடலில் மாலை 4½ மணிமுதல் இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

சென்னை மகளிர் மன்ற செயற்குழுக் கூட்டம்

"25—1—57 வெள்ளி மாலை 6 மணிக்கு மன்ற அலுவலகத்தில் (179, போர்ச்சுகீஸ் சர்ச் தெருவில்) மகளிர் மன்ற செயற்குழுக் கூட்டம் நடைபெறும். எல்லா செயற்குழு உறுப்பினர்களும் தவறாது வர விழைகிறேன்"

என்று, மன்றத் தலைவர் சத்தியவாணிமுத்து அறிவிக்கிறார்.

பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

"24—1—57ல், தஞ்சை அம்மாப்பேட்டையில் நடைபெற இருந்த பொதுக்கூட்டம், அடுத்த மாதத்தில் தேர்தல் பிரச்சாரக் கூட்டமாக நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதால், 24-ந் தேதி பொதுக்கூட்டம் நடைபெறாது என்பதை அறிவித்துக்கொள்கிறேன்"

என்று, தஞ்சை அம்மாப்பேட்டை தி. மு. க. கிளைச் செயலாளர் எஸ். எம். பக்கிரிசாமி அறிவிக்கிறார்.

'நயா பைசா' அட்டவணை

பொது மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் இரண்டு நாணய மாற்று அட்டவணைகளை மத்திய அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

இந்திய நாணயச் சட்டத்தின் கீழ் ஒரு ரூபாய்க்கு 100 நயா பைசா என்பதால், ஒரு அட்டவணையில் தற்போது உள்ள நாணயங்களின் மதிப்பு நயா பைசாவில் காட்டப்பட்டிருக்கிறது.

இந்த முறையில் சரிசமமான புதிய நயா பைசாவிற்குமேல் உள்ளதை முழு நயா பைசாவாகக் கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது உள்ள நாணயங்களை நயா பைசாவாக மாற்ற இந்த அட்டவணை பயன்படும்.

இதேபோன்று, நயா பைசாவுக்குச் சமமான தற்போதைய நாணயங்களின் மதிப்பும் மற்றொரு அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'நயா பைசா'க்கள்!

இரயில்வே நிலையங்களில் கண்காட்சிக்கு வைக்கப்படும்

பம்பாய், சன, 22—

புதிய தசாம்ச நாணய முறையை மக்களிடையே பரப்புவதற்காக, எல்லா முக்கிய இரயில்வே நிலையங்களிலும் புதிய நாணயங்களைக் கண்காட்சியாக வைக்கும்படி இரயில்வே போர்டு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஏப்ரல் 1-ந் தேதி முதல் புதிய நாணயங்கள் அமுலுக்கு வருகிறது.

பால்செட்டி சத்திரத்திற்கு

அண்ணா வருகை

25—1—57 மாலை 6-மணிக்கு காஞ்சியை அடுத்த பால்செட்டி சத்திரத்தில் நடைபெறும் கிளைக் கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் கலந்து கொள்வார்கள்.

விழாவிற்குத் தோழர் சி. வி. எம். அண்ணாமலை எம். சி., தலைமை தாங்குவார்.

காஞ்சி நகர்மன்றத் துணைத் தலைவர் அ. க. தங்கவேலர், தோழர் சி. வி. இராசகோபால் ஆகியோர் பேசுவர்.

கழகக் கூட்டங்கள்

★

கொழவணிவாக்கம் :

24—1—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : டி. இராசரத்தினம்

பேசுவோர் :

என். வி. நடராசன்

வி. எஸ். கோவிந்தராசன்

பி. சின்னசாமி

(கூட்டத்தில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிக்கப்படும்.)

★

முத்துவாஞ்சேரி :

தி. மு கழகத் துவக்க விழா

25—1—57 மாலை 6 மணிக்கு

தலைவர் : பா. தங்கவேல்

கொடியேற்றுபவர் :

இராமானுசம்

துவக்குபவர் :

கோ. சிவபெருமாள்

அண்ணா படத்திறப்பு :

சோ. கோவிந்தராசன்

பேசுவோர் :

எம். எஸ். மணி

எல். டி. கிட்டப்பா

பா. வே. சேயராமன்

வீரசோழன், ஆ. ம. வாயி

கோள்கைப்பித்தன்

சென்னை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுக் கழக ஆண்டுவிழா

25—1—57 மாலை 6½ மணிக்கு சென்னை—இராயப்பேட்டை ஆல் தோட்டத்தில் மேற்படி கழக ஆண்டுவிழா தோழர் தி. கே. அரசு தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, முகவை ஆர். எஸ். பாண்டியன், ம. நம்பி, இரா. நெடுமாறன் ஆகியோர் பேசுவர்.

சைதைஆசிரியர் கல்லூரியில்

க. அன்பழகன்

24—1—57 மாலை 5 மணிக்கு சென்னை — சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி தமிழ்ப் பேரவையில் நடைபெறும் கூட்டத்தில் தோழர் க. அன்பழகன் சொற்பொழிவாற்றுவார்.

திருமண விருந்தில் தீவிபத்து; 18 பேர் பலி

இலங்கைத் தமிழர் திருமணத்தில் ஏற்பட்ட பரிதாப சம்பவம்

கொழும்பு, சன 22—

கண்டியிலிருந்து 9 மைல் தூரத்திலுள்ள தேயிலைத் தோட்டமொன்றில் நடைபெற்ற திருமண விருந்தொன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் நான்கு குழந்தைகள் உட்பட 18 பேர் மாண்டுவிட்டனர்; மருத்துவமனையில் 12 பேர் கவலைக்கிடமான நிலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்; இவர்களில் 17 வயது நிரம்பிய மணப்பெண் பாக்கியமும் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது; மணமகன் காதை யாவுக்கு ஆலோசனை நிகழ்ந்ததாக ஏற்பட்டிருக்கிறதாம்; தம்பதிகள் இலங்கையில் வாழும் தமிழர்கள்.

திருமண விருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கையில் ஏற்பட்ட இந்தத் தீவிபத்திற்குக் காரணம் தெரியவில்லையாம்.

¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤

ஏஜெண்டுத் தோழர்களுக்கு:

சென்னை 25-1-57 (வெளியூர் 26-1-57) 'நம் நாடு' இதழில், தி. மு. கழக அபேட்சகர்களின் இரண்டாவது பட்டியல் வெளியாகிறது.

அதிகப் பிரதிகள் தேவைப்படும் ஏஜெண்டுத் தோழர்கள் உடனடியாகத் தெரிவிக்குமாறு கோரப்படுகிறார்கள்.

—பொறுப்பாளர்.

¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤¤

கடலூர் நகர தி. மு. க. தோழர்களுக்கு

'கடலூர் நகர எல்லையில் இயங்கும் தி. மு. கழகக் கிளைகள், சார்பு மன்றங்கள், தனிப்பட்டோர் யாரும் நகரக் கழக அனுமதியின்றி தேர்தல் நிதியோ, பிறன்கொடை வசூலித்தலோ, கழகப் பொதுக்கூட்டங்கள், நிகழ்ச்சிகள் நடத்தவோ கூடாது. கழகம் தேர்தலில் ஈடுபட்டிருக்கும் இந்நேரத்தில் கழகத்தின் பேரால் தனிப்பட்டோர் சிலர் நிதி வசூலிப்பதாகப் புகார் வந்துள்ளது. கழகத் தோழர்கள் அனைவரும் கண்ணியத்துடன் நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்''

என்று கடலூர் நகர தி மு. கழகச் செயலாளர் சி. கோவிந்தராசன் அறிவிக்கிறார்.

'பகுத்தறிவு' அறிவிப்பு

"இந்திய சர்க்கார் இறக்குமதிக் கொள்கையின் விளைவாகப் பத்திரிகைக் காகித விலை ஏறிவிட்டது. பத்திரிகைச் சட்ட சலுகைப்படி குறைந்த விலையில் காகிதம் பெற அரசினருக்கு விண்ணப்பித்துள்ளோம்.

"தற்போது, 25—1—57 இதழ் நிறுத்தப்பட்டு, 1—2—57-ல் 16 பக்கங்களுடன் இரண்டணா விலையில், புதிய சிறப்புப் பகுதிகளுடன் 'பகுத்தறிவு' வெளிவரும். தொடர்ந்து சிறிது காலத்திற்கு மாதம் தோறும் 1, 15-ந் தேதிகளில் வெளிவரும் என்பதை விற்பனையாளர், கையொப்பதாரர் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்,"

என்று, 'பகுத்தறிவு' இதழ் ஆசிரியர் ப. கண்ணன் அறிவிக்கிறார்.

சென்னை 47-வதுவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு

24—1—57 இரவு 7 மணிக்கு சென்னை சைதை, கடைததெரு, எண் 95 இல்லத்தில் கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

24—1—57 இரவு 7 மணிக்கு, சென்னை 16-வது வட்டம் தாண்டவராயபிள்ளை தெரு, எண் 22 திருவள்ளுவர் முன்னேற்றக் கழகத்தில், தோழர் தா. ஆறுமுகம் தலைமையில் 'உதயசூரியன்' எனும் பொருள் குறித்துத் தோழர்கள் பலர் பேசுவர்; தோழர் மா. தனபால் தேர்தல் பிரச்சாரப் பாட்டுப் பாடுவார். குறள் போட்டியும் நடைபெறும்.

முகவரி மாற்றம்

கே. ஆர். பி. மணிமொழியன்

மகிழ்ச்சி மன்றம்,

தெற்கு மாடவீதி,

செங்கல்பட்டு

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.